රාජ්‍ය පරිපාලන, පළාත් සභා සහ පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Provincial Councils and Local Government

ස්වදේශ කටයුතු අංශය
உள்நாட்டலுவல்கள் பிரிவு
Home Affairs Division

"නිල මැදුර", ඇල්විටිගල මාවත, කොළඹ 05.
"நில மெதுர", எல்விடிகல மாவத்தை, கொழும்பு 05
"Nila Madura", Elvitigala Mawatha, Colombo 05.

TP : +94 112 050 450
Fax : +94 112 369 971
Email: info@moha.gov.lk
Web : www.moha.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: HA/3/7/28-7
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2026.03.

சகல மாவட்டச் செயலாளர்கள் /அரசாங்க அதிபர்கள்
சகல பிரதேச செயலாளர்கள்,

**<u>நிர்வாக கிராம உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் - 2027</u>**

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட நடைமுறை ஒழுங்கு விதி 1 ஆம் வகுதியின் XVIII ஆம் அத்தியாயத்தின் நடைமுறை ஒழுங்கின் படி மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் நிர்வாக கிராம உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றக் கொள்கையின் படி 2027 ஆம் ஆண்டின்றான கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் நிர்வாக கிராம உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

02. 2026.12.31 ஆந் திகதிக்கு ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 05 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் ஒரு பிரதேச செயலகப் பிரிவில் 05 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள நிர்வாக கிராம உத்தியோகத்தர்கள் கட்டாய இடமாற்றத்துக்கு உட்படுதல் வேண்டும். கிராம உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யும் போது அவர்கள் பதிற்கடமையாற்றும் இடங்களுக்கு இடமாற்றத்தை மேற்கொள்ளாதிருக்க பொறுப்பாக இருத்தல் வேண்டும் என்பதோடு, அவ்வாறு வழங்கப்படும் இடமாற்றக் கட்டளைகளை அமைச்சுக்கு (இணைப்பு 04 ) இன்படி 2026.07.15 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. இடமாற்றக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கீழே தரப்பட்டுள்ள கால அட்டவணைக்கமைய பிரதேச மற்றும் மாவட்ட இடமாற்றச் சபை / மாவட்ட மேன்முறையீட்டுச் சபையின் கீழ் வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

| | |
|---|---|
| ஏப்ரல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் | வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பங்களை கோருவது தொடர்பான அறிவித்தலை வெளியிடல். |
| | வருடாந்த இடமாற்றக் குழுவைத் தாபித்தல். |
| | குறித்த அதிகாரிக்கு வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பப்படிவங்களை ஒப்படைத்தல் |
| மே மாதம் 15 ஆந் | குறித்த அதிகாரிக்கு கிடைக்கப்பெறும் வருடாந்த |

| | |
|---|---|
| திகதிக்கு முன்னர் | இடமாற்றத்திற்கான விண்ணப்பப்படிவங்களை உரிய வருடாந்த இடமாற்றக் குழுவிடம் ஒப்படைத்தல். |
| மே மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் | வருடாந்த இடமாற்றக் குழுவின் இடமாற்ற முன்மொழிவுகளை குறித்த அதிகாரிக்கு எழுத்தில் கையளித்தல் |
| ஜூன் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் | முன்மொழியப்பட்ட வருடாந்த இடமாற்றம் தொடர்பான அறிவித்தலை வெளியிடல் |
| ஜூன் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் | வருடாந்த இடமாற்ற மீளாய்வுக் குழுவை நியமனம் செய்தல் |
| ஜூலை மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் | வருடாந்த இடமாற்ற முன்மொழிவு மீளாய்வுக் குழுவினால் முன்மொழியப்பட்ட வருடாந்த இடமாற்றம் தொடர்பான தனது எழுத்து மூல பரிந்துரையை மாவட்டச் செயலாளரிடம் ஒப்படைத்தல் மற்றும் வெற்றிடப் பட்டியலையும் இடமாற்றக் கட்டளையையும் (இணைப்பு 01 இன் படி) அமைச்சுக்கு அனுப்பி வைத்தல். |
| செப்டம்பர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் | வருடாந்த இடமாற்றக் கட்டளையை வெளியிடல் |
| செப்டம்பர் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் | மேன்முறையீட்டுச் சபையின் முடிவுகளை அமைச்சுக்கு சமர்ப்பித்தல் |
| ஜனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் | வருடாந்த இடமாற்றக் கட்டளை பயன்வலுப்பெறல். |

04. அதன்படி, 2027.01.01 ஆந் திகதி முதல் கிராம உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பிரதேச செயலகப் பிரிவினுள் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கிடையே இடமாற்றங்களை மேற்கொள்ள பிரதேச செயலாளரினாலும், மாவட்டத்தினுள் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கிடையே இடமாற்றங்களை மேற்கொள்வதாயின் மாவட்ட செயலாளரினாலும் விண்ணப்பங்களை கோருவதற்கும், அவ்விடமாற்றங்களை அவதானிப்பதற்காக இடமாற்றச் சபை உரியவகையில் பிரதேச செயலகப் பிரிவு மற்றும் மாவட்ட செயலகப் பிரிவு மட்டத்தில் நியமனம் செய்வதற்கும் இச்சபைகளின் பரிந்துரைகளுக்கு ஏற்ப இடமாற்றங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

05. மேலும், பிரதேச செயலாளரினால் மேற்கொள்ளப்படுகின்ற வருடாந்த இடமாற்றக் கட்டளை தொடர்பில் திருப்தியடையாத ஒருவர் அது குறித்த மேன்முறையீட்டினை மாவட்ட மேன்முறையீட்டுச் சபைக்கும், மாவட்டச் செயலாளரினால் மேற்கொள்ளப்படுகின்ற வருடாந்த இடமாற்றக் கட்டளைகள்

தொடர்பில் திருப்தியடையாத ஒருவர் அது குறித்த மேன்முறையீட்டை இந்த அமைச்சின் மேன்முறையீட்டுச் சபைக்கும் தமது நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் கூடிய **இடமாற்றக் கட்டளை வெளியிடப்பட்டு** 14 **நாட்களினுள்** (இணைப்பு 02) இன் படி சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறியப்படுத்தல் வேண்டும். குறிப்பிட்ட திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட முறைமைகளுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள மேன்முறையீடுகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் எந்தவொரு கவனமும் செலுத்தப்பட மாட்டாது.

06. மாவட்டங்களுக்கிடையிலான இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்கும் கிராம உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள (இணைப்பு 03) இன் படி தயாரித்து பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்களின் பரிந்துரையுடன் இவ்வமைச்சுக்கு 2026.06.30 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட மாதிரிப்படிவத்துக்கும் முறைமைக்கும் புறம்பாக அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

07. 2027 ஆம் ஆண்டில் மாவட்டங்களுக்கிடையிலான வருடாந்த இடமாற்றங்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட திகதியின் பின்னர் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் குறித்து கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது கடமைத் தேவையின் அடிப்படையில் அல்லது பிற விசேட காரணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இடமாற்றங்கள் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்படும்.

08. நிர்வாக கிராம உத்தியோகத்தர்களின் இடமாற்றம் (கிராம உத்தியோகத்தர் சேவையின் அதிஉயர் தரம்) மாவட்டங்களுக்கிடையில் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கிடையில் இடமாற்றங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்ற உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பத்தை (இணைப்பு 03) உரிய திகதிக்கு முன்னர் பிரதேச செயலாளர் மற்றும் மாவட்டச் செயலாளர் ஊடாக இந்த அமைச்சுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

- பிரதேச செயலகப் பிரிவொன்றில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தையுடைய உத்தியோகத்தர்கள் இடமாற்றங்களைக் கோராத போதிலும் இடமாற்றக் கொள்கையின் ஏற்பாடுகளுக்கமைய மற்றொரு பிரதேச செயலகப் பிரிவுக்கு இடமாற்றம் பெறுவதற்கு கட்டுப்பட்டுள்ளார்கள்.

09. 2027 ஆம் ஆண்டில் மாவட்டத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டிய விதம் குறித்த அவதானங்கள் மற்றும் பரிந்துரைகள் காணப்படின் அப்பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகளுடன் இவ்விண்ணப்பத்தை உரிய திகதிக்கு முன்னர் அமைச்சுக்கு மாவட்டச் செயலாளர் ஊடாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

10. மேலும், 2026.04.15 ஆந் திகதிக்கு சகல பிரதேச செயலகங்களிலும் உள்ள நிர்வாக கிராம உத்தியோகத்தர்கள் தொடர்பான அறிக்கையொன்று இங்கு (இணைப்பு 04) இன் பிரகாரம் 2026.06.30 ஆந் திகதிக்கு முன்னர் அமைச்சுக்கு அனுப்ப சகல மாவட்டச் செயலாளர்களும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

11. இவ்விண்ணப்பங்கள் கோரப்படுவது தொடர்பாக சகல கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் நிர்வாக கிராம உத்தியோகத்தர்களுக்கு அறியப்படுத்துமாறும் மாவட்டத்தினுள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவினுள் இடமாற்றக் கொள்கையின் கீழ் 2027 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள சகல இடமாற்றங்களும் 2027.01.01 ஆந் திகதி முதல் அமுல்நடாத்தப்படும் வகையில் சகல இடமாற்றங்களையும் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இதற்கு மேலதிகமாக வருடாந்த இடமாற்றக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு செயற்படுமாறும் அறியத்தருகின்றேன்.

12.மேலும், இலக்கம் 2230 மற்றும் 2021.05.28 ஆம் திகதிய வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கமைய இணைத்துக்கொள்ளப்பட்ட புதிய உத்தியோகத்தர்களை, அந்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் முறையான நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதேச செயலகப் பிரிவிற்கு வெளியே 03 வருடங்கள் செல்லும் வரை இடமாற்றம் செய்ய முடியாது என்பதால், அந்த கிராம உத்தியோகத்தர்கள் இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்க முடியாது என்பதுடன், அத்தகைய கிராம உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கிடையில் இடமாற்றம் செய்யப்படக் கூடாது.

13. மேலும், வருடாந்த இடமாற்றக் கட்டளைகள் மற்றும் மேன்முறையீடுகள் தொடர்பான தீர்மானங்கள் தனிப்பட்ட ரீதியில் கடிதங்கள் மூலம் எவருக்கும் அறிவிக்கப்பட மாட்டாது என்பதையும், இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் உள்ள கால அட்டவணையின் படி அமைச்சின் இணையதளத்தில் (www.moha.gov.lk) வெளியிடப்படும் என்பதையும் மேலும் அறியத்தருகின்றேன். அதற்கமைய, குறித்த அறிவித்தலின்படி இடமாற்றக் கட்டளைகள் மற்றும் மேன்முறையீட்டுத் தீர்மானங்கள் குறித்து அறிந்துகொள்வதும் அதற்கேற்ப செயற்படுவதும்/செயற்படுத்துவதும் சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்கள்/ பிரதேச செயலாளர்கள்/ நிர்வாக கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும்.

14. வருடாந்த இடமாற்றக் கட்டளைகள் வெளியிடப்பட்டதன் பின்னர், குறித்த கட்டளைகளை இரத்துச் செய்வது அவசியமாயின், அதற்காகக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அமைச்சின் மேன்முறையீட்டுச் சபையிடம் மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், அதன் பின்னர் அமைச்சுக்கு மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்காதிருப்பதை உறுதி செய்ய அனைத்து மாவட்ட செயலாளர்களும் பிரதேச செயலாளர்களும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

15. மேலும், மாவட்டத்தினுள் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கிடையில் கிராம உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யும் போது, இலக்கம் 2460 மற்றும் 2025.10.24 ஆம் திகதிய வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கமைய இணைத்துக்கொள்ளப்படவுள்ள பிரதேச செயலக அலுவலகங்களில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டு இடமாற்றக் கட்டளைகள் வழங்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு வழங்கப்படும் இடமாற்றக் கட்டளைகளை 2026 ஆகஸ்ட் 10 ஆம் திகதிக்கு முன்னர் இணைப்பு 05 இற்கமைய தாமதமின்றி அமைச்சுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

ஒமாலி விமலரத்ன,
மேலதிகச் செயலாளர்
(உள்நாட்டலுவல்கள்)

ஒப்பம் / எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

**வரைவாகும்**

சகல மாவட்டச் செயலாளர்கள் /அரசாங்க அதிபர்கள்
சகல பிரதேச செயலாளர்கள்,

**நிர்வாக கிராம உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் - 2027**

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட நடைமுறை ஒழுங்கு விதி 1 ஆம் வகுதியின் XVIII ஆம் அத்தியாயத்தின் நடைமுறை ஒழுங்கின் படி மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் நிர்வாக கிராம உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றக் கொள்கையின் படி 2027 ஆம் ஆண்டின்றான கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் நிர்வாக கிராம உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

02. 2026.12.31 ஆந் திகதிக்கு ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 05 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் ஒரு பிரதேச செயலகப் பிரிவில் 05 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள நிர்வாக கிராம உத்தியோகத்தர்கள் கட்டாய இடமாற்றத்துக்கு உட்படுதல் வேண்டும். கிராம உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யும் போது அவர்கள் பதிற்கடமையாற்றும் இடங்களுக்கு இடமாற்றத்தை மேற்கொள்ளாதிருக்க பொறுப்பாக இருத்தல் வேண்டும் என்பதோடு, அவ்வாறு வழங்கப்படும் இடமாற்றக் கட்டளைகளை அமைச்சுக்கு (இணைப்பு 04 ) இன்படி 2026.07.15 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. இடமாற்றக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கீழே தரப்பட்டுள்ள கால அட்டவணைக்கமைய பிரதேச மற்றும் மாவட்ட இடமாற்றச் சபை / மாவட்ட மேன்முறையீட்டுச் சபையின் கீழ் வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

| | |
|---|---|
| ஏப்ரல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் | வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பங்களை கோருவது தொடர்பான அறிவித்தலை வெளியிடல். |
| | வருடாந்த இடமாற்றக் குழுவைத் தாபித்தல். |
| | குறித்த அதிகாரிக்கு வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பப்படிவங்களை ஒப்படைத்தல் |
| மே மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் | குறித்த அதிகாரிக்கு கிடைக்கப்பெறும் வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பப்படிவங்களை உரிய வருடாந்த இடமாற்றக் குழுவிடம் ஒப்படைத்தல். |

| | |
|---|---|
| மே மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் | வருடாந்த இடமாற்றக் குழுவின் இடமாற்ற முன்மொழிவுகளை குறித்த அதிகாரிக்கு எழுத்தில் கையளித்தல் |
| ஜூன் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் | முன்மொழியப்பட்ட வருடாந்த இடமாற்றம் தொடர்பான அறிவித்தலை வெளியிடல் |
| ஜூன் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் | வருடாந்த இடமாற்ற மீளாய்வுக் குழுவை நியமனம் செய்தல் |
| ஜூலை மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் | வருடாந்த இடமாற்ற முன்மொழிவு மீளாய்வுக் குழுவினால் முன்மொழியப்பட்ட வருடாந்த இடமாற்றம் தொடர்பான தனது எழுத்து மூல பரிந்துரையை மாவட்டச் செயலாளரிடம் ஒப்படைத்தல் மற்றும் வெற்றிடப் பட்டியலையும் இடமாற்றக் கட்டளையையும் (இணைப்பு 01 இன் படி) அமைச்சுக்கு அனுப்பி வைத்தல். |
| செப்டம்பர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் | வருடாந்த இடமாற்றக் கட்டளையை வெளியிடல் |
| செப்டம்பர் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் | மேன்முறையீட்டுச் சபையின் முடிவுகளை அமைச்சுக்கு சமர்ப்பித்தல் |
| ஜனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் | வருடாந்த இடமாற்றக் கட்டளை பயன்வலுப்பெறல். |

04. அதன்படி, 2027.01.01 ஆந் திகதி முதல் கிராம உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பிரதேச செயலகப் பிரிவினுள் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கிடையே இடமாற்றங்களை மேற்கொள்ள பிரதேச செயலாளரினாலும், மாவட்டத்தினுள் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கிடையே இடமாற்றங்களை மேற்கொள்வதாயின் மாவட்ட செயலாளரினாலும் விண்ணப்பங்களை கோருவதற்கும், அவ்விடமாற்றங்களை அவதானிப்பதற்காக இடமாற்றச் சபை உரியவகையில் பிரதேச செயலகப் பிரிவு மற்றும் மாவட்ட செயலகப் பிரிவு மட்டத்தில் நியமனம் செய்வதற்கும் இச்சபைகளின் பரிந்துரைகளுக்கு ஏற்ப இடமாற்றங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

05. மேலும், பிரதேச செயலாளரினால் மேற்கொள்ளப்படுகின்ற வருடாந்த இடமாற்றக் கட்டளை தொடர்பில் திருப்தியடையாத ஒருவர் அது குறித்த மேன்முறையீட்டினை மாவட்ட மேன்முறையீட்டுச் சபைக்கும், மாவட்டச் செயலாளரினால் மேற்கொள்ளப்படுகின்ற வருடாந்த இடமாற்றக் கட்டளைகள் தொடர்பில் திருப்தியடையாத ஒருவர் அது குறித்த மேன்முறையீட்டை இந்த அமைச்சின் மேன்முறையீட்டுச் சபைக்கும் தமது நிறுவனத் தலைவரின்

பரிந்துரையுடன் கூடிய **இடமாற்றக் கட்டளை வெளியிடப்பட்டு 14 நாட்களினுள்** (இணைப்பு 02) இன் படி சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறியப்படுத்தல் வேண்டும். குறிப்பிட்ட திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட முறைமைகளுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள மேன்முறையீடுகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் எந்தவொரு கவனமும் செலுத்தப்பட மாட்டாது.

06. மாவட்டங்களுக்கிடையிலான இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்கும் கிராம உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள (இணைப்பு 03) இன் படி தயாரித்து பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்களின் பரிந்துரையுடன் இவ்வமைச்சுக்கு 2026.06.30 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட மாதிரிப்படிவத்துக்கும் முறைமைக்கும் புறம்பாக அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

07. 2027 ஆம் ஆண்டில் மாவட்டங்களுக்கிடையிலான வருடாந்த இடமாற்றங்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட திகதியின் பின்னர் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் குறித்து கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது கடமைத் தேவையின் அடிப்படையில் அல்லது பிற விசேட காரணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இடமாற்றங்கள் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்படும்.

08. நிர்வாக கிராம உத்தியோகத்தர்களின் இடமாற்றம் (கிராம உத்தியோகத்தர் சேவையின் அதிஉயர் தரம்) மாவட்டங்களுக்கிடையில் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கிடையில் இடமாற்றங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்ற உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பத்தை (இணைப்பு 03) உரிய திகதிக்கு முன்னர் பிரதேச செயலாளர் மற்றும் மாவட்டச் செயலாளர் ஊடாக இந்த அமைச்சுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

- பிரதேச செயலகப் பிரிவொன்றில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தையுடைய உத்தியோகத்தர்கள் இடமாற்றங்களைக் கோராத போதிலும் இடமாற்றக் கொள்கையின் ஏற்பாடுகளுக்கமைய மற்றொரு பிரதேச செயலகப் பிரிவுக்கு இடமாற்றம் பெறுவதற்கு கட்டுப்பட்டுள்ளார்கள்.

09. 2027 ஆம் ஆண்டில் மாவட்டத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டிய விதம் குறித்த அவதானங்கள் மற்றும் பரிந்துரைகள் காணப்படின் அப்பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகளுடன் இவ்விண்ணப்பத்தை உரிய திகதிக்கு முன்னர் அமைச்சுக்கு மாவட்டச் செயலாளர் ஊடாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

10. மேலும், 2026.04.15 ஆந் திகதிக்கு சகல பிரதேச செயலகங்களிலும் உள்ள நிர்வாக கிராம உத்தியோகத்தர்கள் தொடர்பான அறிக்கையொன்று இங்கு

(இணைப்பு 04) இன் பிரகாரம் 2026.06.30 ஆந் திகதிக்கு முன்னர் அமைச்சுக்கு அனுப்ப சகல மாவட்டச் செயலாளர்களும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

11. இவ்விண்ணப்பங்கள் கோரப்படுவது தொடர்பாக சகல கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் நிர்வாக கிராம உத்தியோகத்தர்களுக்கு அறியப்படுத்துமாறும் மாவட்டத்தினுள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவினுள் இடமாற்றக் கொள்கையின் கீழ் 2027 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள சகல இடமாற்றங்களும் 2027.01.01 ஆந் திகதி முதல் அமுல்நடாத்தப்படும் வகையில் சகல இடமாற்றங்களையும் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இதற்கு மேலதிகமாக வருடாந்த இடமாற்றக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு செயற்படுமாறும் அறியத்தருகின்றேன்.

12.மேலும், இலக்கம் 2230 மற்றும் 2021.05.28 ஆம் திகதிய வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கமைய இணைத்துக்கொள்ளப்பட்ட புதிய உத்தியோகத்தர்களை, அந்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் முறையான நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதேச செயலகப் பிரிவிற்கு வெளியே 03 வருடங்கள் செல்லும் வரை இடமாற்றம் செய்ய முடியாது என்பதால், அந்த கிராம உத்தியோகத்தர்கள் இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்க முடியாது என்பதுடன், அத்தகைய கிராம உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கிடையில் இடமாற்றம் செய்யப்படக் கூடாது.

13. மேலும், வருடாந்த இடமாற்றக் கட்டளைகள் மற்றும் மேன்முறையீடுகள் தொடர்பான தீர்மானங்கள் எவருக்கும் தனிப்பட்ட கடிதங்கள் மூலம் அறிவிக்கப்படமாட்டாது என்பதையும், இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் கால அட்டவணைக்கு அமைவாக அமைச்சின் இணையத்தளத்தில் (www.moha.gov.lk) வெளியிடப்படும் என்பதையும் மேலதிகமாக அறியத்தருகின்றேன். அதற்கமைய, குறித்த அறிவித்தலின்படி இடமாற்றக் கட்டளைகள் மற்றும் மேன்முறையீட்டுத் தீர்மானங்கள் குறித்து அறிந்துகொள்வதும் அதற்கேற்ப செயற்படுவதும்/செயற்படுத்துவதும் சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்கள்/ பிரதேச செயலாளர்கள்/ நிர்வாக கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும்.

14. வருடாந்த இடமாற்றக் கட்டளைகள் வெளியிடப்பட்டதன் பின்னர், குறித்த கட்டளைகளை இரத்துச் செய்வது அவசியமாயின், அதற்காகக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அமைச்சின் மேன்முறையீட்டுச் சபையிடம் மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், அதன் பின்னர் அமைச்சுக்கு மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்காதிருப்பதை உறுதி செய்ய அனைத்து மாவட்ட செயலாளர்களும் பிரதேச செயலாளர்களும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

15. மேலும், மாவட்டத்தினுள் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கிடையில் கிராம உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யும் போது, இலக்கம் 2460 மற்றும்

2025.10.24 ஆம் திகதிய வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கமைய இணைத்துக்கொள்ளப்படவுள்ள பிரதேச செயலக அலுவலகங்களில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டு இடமாற்றக் கட்டளைகள் வழங்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு வழங்கப்படும் இடமாற்றக் கட்டளைகளை 2026 ஆகஸ்ட் 10 ஆம் திகதிக்கு முன்னர் இணைப்பு 05 இற்கமைய தாமதமின்றி அமைச்சுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

ஓமாலி விமலரத்ன,
மேலதிகச் செயலாளர்
(உள்நாட்டலுவல்கள்)

ஒப்பம் / எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு